DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **STC No. 572/2024** |
| Deposition of witness for | Prosecution **PW - 1**<br>Deffence<br>Court |

Name : **திரு. சுஹைப்**
Father's Name : திரு.
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2025.

**(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை** :

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்து மூல நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்துகள் என்னுடையதுதான். என் தரப்பு

வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவனங்களை தாக்கல் செய்கிறேன். அவை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடபடவில்லை என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு **ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**.

| வரிசை எண் | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.07.2024 | ரூ.1,25,000/-த்திற்கான 164557 எண்ணிட்ட SBI வங்கி கூடலூர் கிளையின் காசோலை | அசல் |
| வா.சா.ஆ.2 | 22.07.2024 | வங்கி குறிப்புரை | அசல் |
| வா.சா.ஆ.3 | 07.08.2024 | வங்கி குறிப்புரை | அசல் |
| வா.சா.ஆ.4 | 12.08.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 14.08.2024 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

எனவே, புகார்ப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1. நான் எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து எதிரிக்கு ரூபாய் 1,25,000/- கொடுத்தேன் என்றால் 15.06.2024 அன்று GTMO Hospital அருகில் காரில் வைத்து கொடுத்தேன். என் கையில் எப்போதும் பணம் இருக்குமா என்றால் இல்லை. நான் மேற்படி பணத்தை எவ்வாறு எங்கிருந்து எடுத்துக் கொடுத்தேன் என்றால் நான்

கன்ஸ்டிரக்சன் வேலை செய்கிறேன், அந்த வேலைக்காக வைத்திருந்த காசு அது.

2. Workers-ன் கூலி போன்ற பணம் என்னிடம் இருக்கும். பணத்தை நான் எனது முதலாளியிடம் இருந்து வாங்கினேன். எந்த முதலாளியிடம் இந்த பணத்தை வாங்கினேன் என்றால் குறிப்பிட்ட முதலாளி இல்லை 2, 3 வேலைகள் நடக்கிறது, அனைத்து பணமும் கையில் இருக்கும். எதிரிக்கு பணத்தை கொடுத்ததால் வேலையாட்களுக்கு கூலி கொடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

3. மேற்படி பணம் இல்லாமல் வேறு பணம் என்னிடம் இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்று என்னிடம் எவ்வளவு பணம் இருந்தது என்றால் ரூபாய் 2,00,000/-க்கு மேல் இருந்தது. நான் மேற்சொன்ன 2, 3 முதலாளிகள் யார் என்றால் சிபு, கார்த்தி, கோவிந்த் ஆகியோர்கள் ஆவார்கள்.

4. இந்த 3 பேரில் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த 3 பேரை கேட்டால் அவர்களுக்கு தெரியுமா என்றால் அவர்கள் எழுதி வைத்திருப்பார்கள். நான் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கான்டிரக்ட் பிசினஸ் செய்யும் விவரத்தை நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5. கூடலூரில் ரெடிமேட் வியாபாரம் செய்த இப்ராஹிம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் அவரது

வியாபாரத்தை எதிரியிடம் கொடுத்துவிட்டு துபாய் சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல, நான் இப்ராஹிம், ரபீக் ஆகியோர்கள் பாட்னர்களாக இருந்தோம்.

6. எதிரிக்கு அந்த வியாபாரம் எப்படி கிடைத்தது என்றால் ரியாஸ் என்பவர் முதலில் இருந்தே பழக்கம், அந்த கடையை விற்பதாக சொல்லும் போது அவர் வாங்குவதாக சொன்னார். அப்படி தான் அவருக்கு நாங்கள் 3 பேரும் சேர்ந்து விற்பனை செய்தோம். அந்த விற்பனையில் ரியாஸ் எனக்கு 2 லட்சம் ரூபாய் தரவேண்டியிருந்தது, அதை அவர் கொடுத்துவிட்டார், பழைய அக்ரிமண்ட் படி கொடுத்துவிட்டார்.

7. ஆனால் அப்போது வாங்கிய காசோலையை நான் திருப்பி கொடுக்கவில்லை என்றால் அக்ரிமண்ட் படி திருப்பி கொடுத்துவிட்டேன். எதிரி எனக்கு பணம் தரவேண்டியது இல்லை என்று சொன்னாலும், அந்த காசோலையை வைத்து தான் நான் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல.

8. நான் மேற்சொன்ன ரூபாய் இரண்டு லட்சத்தை எதிரி எவ்வாறு எனக்கு கொடுத்தார் என்றால் கோகுலம் சிட் பண்ட்-ல் நான் பணம் கட்ட வேண்டியிருந்தது, அதை அவர் தான் கட்டினார், மீதபணத்தை என் கையில் கொடுத்துவிட்டார். கோகுலம் சிட்டில் எவ்வளவு பணம் கட்டினார் என்றாலும், எனது கையில் எவ்வளவு

பணம் கொடுத்தார் என்றாலும் எனக்கு ஞாபகம் இல்லை.

9. மேற்படி அக்ரிமண்ட் போட்டது போன்ற விவரங்களை நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 12.08.2024-ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் எந்த காசோலை எப்போது திருப்பப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவர் எனக்கு கொடுத்த செக் நம்பரை குறிப்பிட்டுள்ளேன்.

10. நான் அறிவிப்பில் எந்த காசோலை திருப்பப்பட்டது என்றும், காசோலை எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், எதிரியிடம் இருந்து பெற்ற நிரப்பப்படாத காசோலைக்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**